எல்லையோரச் சாலைகள் நம் நாட்டின் வடக்கு, வடகிழக்கு எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய வளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் இது ஒரு அடையாளம் ஆகும்.

21. **குழாய் போக்குவரத்தின் நன்மைகள் யாவை?**
கரடுமுரடான தரைகளிலும், நீருக்கடியில் குழாய் போக்குவரத்தை அமைக்க இயலும் இப்பாதை அமைக்க முதலில் அதிக செலவாகும். ஆனால் தொடர்ந்து பராமரிப்பதற்கு செலவு குறைவு கப்பலில் ஏற்றி இறக்கும் இழப்பையும் தாமத்தை குறைகிறது இதனை இயக்க குறைந்த அளவு எரிபொருளை செலவாகும்.

22. **தகவல் போக்குவரத்து வலயமைப்பின் நன்மைகள் யாவை?**
i) தகவல் தொடர்பினை திறனை மேம்படுத்தியுள்ளது.
ii) உலகின் எல்லாப்பகுதிகளுக்கும் தகவல் பரிமாற்றத்திற்கு உதவுகிறது.
iii) வணிக வளர்சிக்கு பயன்படுகிறது.
iv) மக்களின் வாழ்கை தரத்தை உயர்த்துகிறது.

23. **தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன?**
புவியின் எந்த ஒரு பொருளையும் நேரடியாக தொடர்புகொள்ளாமல் புவியின் விவரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வு ஆகும்.

24. **தொலை நுண்ணுணர்வின் பகுதிகள் யாவை?**
i) இலக்கு,
ii) ஆற்றல் மூலம்
iii) பிரதிபலிக்கும் வழி
iv) உணர்வி என்ற நான்கு பகுதிகளை கொண்டது.

25. **புவித்தகவல் தொகுதியின் இரண்டு பயன்பாடுகளை குறிப்பிடுக.**
சுரங்கங்கள், தோண்டவும், கனிம வளங்களை கண்டறியவும், புவித்தகவல் தொகுதிகள் பயன்படுகின்றன. மின்சக்தி நிறுவனங்கள் குறிப்பிட்ட பகுதியின் மின்சக்தி அளவு மற்றும் மின் கம்பியின் வலையமைப்பை கண்காணிக்கவும் ஆராயவும் இதனை பயன்படுத்துகின்றன.



www.kalvisolai.com

# குடிமையியல்

## பகுதி - ஆ

1. **உலக அமைதி அவசியமானது ஏன்?**
உலக மக்கள் அமைதியாக வாழவும், மூன்றாம் உலகப்போர் வராமல் தடுக்கவும், மனித நேயம் வளரவும், வரும் காலத்தில் வளமாக வாழவும் உலக அவசியம்.

2. **மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தயா அழைக்கப்படுவது ஏன்?**
1. இந்தியாவில் மக்கள் ஜாதி, இனம், மொழி போன்றவற்றால் பிரிக்கப்படுகின்றனர்.
2. இப்பிரிவுகள் இந்திய மனித இனத்தைப் பற்றி படிக்கக்கூடிய அருங்காடசியமாகவும், ஆய்வகமாகவும் திகழ்வதால் மனித இனங்களின் அருங்காட்சியகம் எனக் கூறுகிறார்கள்.

3. **சார்க் நாடுகள் பரஸ்பர நல்லுறவை நிலைநாட்ட குறிப்பிட்ட பகுதிகள் பெயரைக் குறிப்பிடுக.**
வங்காள தேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றன. தற்போது ஆப்கானிஸ்தான் இதில் எட்டாவது உறுப்பு நாடாக சேர்ந்துள்ளது.

4. **இந்தியாவில் இசை மற்றும் நடனம் பற்றி சிறுகுறிப்பு வரைக.**
இசை : கர்நாடகம், இந்துஸ்தானி
நடனம் : பரதநாட்டியம், குச்சுப்புடி, கதக்களி, மணிப்புரி மற்றும் ஒடிசி.

5. **தேசியகட்சிகள் யாவை?**
இந்தயத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் ஆறு சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசியக் கட்சிகள் எனப்படும்.
எ.கா. பா.ஜ.க, காங்கிரஸ்.

6. **ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக.**
ஜனநாயகம் என்பது "மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சி செய்வதாகும்.

7. **இந்தியா ஐ.நா.-வின் ஆதரவாளர் - இக்கூற்றை நியாயப்படுத்துக.**
இந்தியா ஐ.நா.வின் தீவிர ஆதரவாளராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐ.நாவின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு அக்கொள்கை வெற்றி பெறவும், அதன் மூலம் அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

# பொருளியல்

1. **தலா வருமானம் என்றால் என்ன?**
நாட்டு வருமானத்தை, அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவு தலா வருமானம் ஆகும்.

2. **உலகமயமாதல் சிறு குறிப்பு தருக.**
ஒரு நாட்டின் அங்காடிகளை பன்னாட்டு அங்காடிகளுடன் தொடர்புபடுத்துவதே உலகமயமாதல் ஆகும்.

3. **நாட்டு வருமானம் - வரையறு.**
நாட்டு வருமானம் என்பது, ஒரு நாட்டில் ஓர் ஆண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.



www.kalvisolai.com

4. **பன்னாட்டு நிறுவனங்கள் - குறிப்பு தருக.**
பன்னாட்டு நிறுவனங்கள் என்பது, பல நாடுகளில் தங்களது தொழில் நிறுவனங்களை தொடங்கி நடத்தி வரும் அமைப்புகளாகும்.

5. **தலையிடாக் கொள்கை - சிறு குறிப்பு வரைக.**
தலையிடாக் கொள்கை என்பது, அரசு பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.

6. **கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?**
பொதுத் துறை நிறுவனங்களும், தனியார் துறை நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது கலப்பு பொருளாதாரம் எனப்படும்.

7. **குடிசைத் தொழில் சிறு குறிப்பு வரைக.**
குடிசைத் தொழில் என்பது, குடும்ப உறுப்பினர்களால் உள்ளூர் அங்காடியில் விற்பனை செய்வதற்காக பழமையான உற்பத்தி முறைகளால் நடத்தப்படும் தொழில் அமைப்பு ஆகும்.

8. **தனியார் மயமாதல் என்றால் என்ன?**
பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறை தொழில் நிறுவனங்களுக்கான விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெறுவதாகும்.

**வேறுபடுத்துக:**

| 1. மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|
| i. வடக்கு தெற்காக நீண்டு காணப்படுகிறது | இவை தொடர்ச்சியான மலைகள் அல்ல |
| ii. தென்மேற்கு பருவகாற்றால் மழை பெறுகிறது | வடகிழக்குப் பருவக்காற்றால் மழை பெறுகிறது. |

| 2. கோடைப் பயிர்கள் (கார்ப்) | குளிர்காலப்பயிர்கள் (ராப்பி) |
|---|---|
| i. மார்ச் மாதம் விதைக்கும் பருவம் | நவம்பர் மாதம் விதைக்கும் பருவம் |
| ii. முக்கிய பயிர்கள் நெல், பழங்கள் | முக்கிய பயிர்கள் கோதுமை, புகையிலை. |

| 3. காற்று சக்தி | அனல்மின் சக்தி |
|---|---|
| i. காற்று சக்தி காற்று ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது | அனல்மின் சக்தி நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. |
| ii. தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் கர்நாடகம், குஜராத், கேரளா, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா காற்று சக்தி உற்பத்தி மையங்கள். | பஞ்சாப், ஹரியானா, இராஸ்தான், கர்நாடகா, கேரளா, ஒரிசா, டெல்லி அனல்மின் சக்தி மையங்கள். |



www.kalvisolai.com

| 4. வேளாண் சார்ந்த தொழில்கள் | கனிமம் சார்ந்த தொழில்கள் |
|---|---|
| i. வேளாண் பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்துகின்றன. | உலோகம் மற்றும் உலேகமற்ற பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்துகின்றன. |
| ii. பருத்தியாலைகள், சணல் ஆலைகள், சர்க்கரை ஆலைகள், எடுத்துக் காட்டாக கூறலாம். | இரும்பு எ.்.கு ஆலைகள் எடுத்துக்காட்டாக கூறலாம். |

| 5. லூ | நார்வெஸ்டர் |
|---|---|
| i. இந்தியாவில் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதியில் கோடை காலத்தில் பகல் நேரத்தில் வீசும் வெப்பக்காற்று லூ | வுட கிழக்குப் பகுதியில் வீசும் தலக்காற்று நார்வெஸ்டர். |

| 6. ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| i. ஏற்றுமதி என்பது நம் நாட்டின் வரி பொருள்களை வெளிநாட்டிற்கு விற்பது. | நமக்கு தேவையான பொருட்களை வெளிநாட்டிலிருந்து வாங்குவதாகும். |
| ii. உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. | சுமார் 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. |

| 7. மேற்குக்கடற்கரைச் சமவெளி | கிழக்குக் கடற்கரைச் சமவெளி |
|---|---|
| i. வடக்கே கட்ச் பகுதியில் இருந்து தெற்கு கன்னியாகுமரி | மேற்கு வங்க ஆற்றுசமவெளியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. |
| ii. இதன் அகலம் 65கி.மீ | இதன் அகலம் 120 கி.மீ |

| 8. வானிலை | காலநிலை |
|---|---|
| i. வானிலை என்பது ஒரு இடத்தில் ஒரு நாளில் நிலவும் தட்பவெப்பநிலை வானிலை | காலநிலை என்பது நீண்ட கால சராசரி வானிலை காலநிலை |
| ii. அன்றாட நிலையை குறிப்பது | இது 35 வருட கால வானிலை குறிப்பது |

| 9. பசுமைமாறாக் காடுகள் | பருவகாற்று |
|---|---|
| i. ஆண்டுக்கு 200 செ.மீக்கு அதிகமான மழைப் பொழிவு | ஆண்டு 70 செ.மீ. முதல் 200 செ.மீ. வரை மழைப் பொழிவு |
| ii. இங்கு காடுகள் பசுமையாகவும் இலைகளை உதிர்காமலும் காணபடுகிறது. | வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. |



www.kalvisolai.com

| 10. வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|
| i. வண்டல் மண் ஆற்றுபடுகைகள் டெல்டா பகுதிகளில் ஆறுகளால் படியவைக்கப்படுகிறது. | கரிசல் மண் தீப்பாறை சிதைவுவதால் உருவாகிறது. |
| ii. நெல், கோதுமை, கரும்பு, எண்ணெய் வித்துகள் பயிரிடப்படுகிறது. | பருத்தி, கரும்பு, சோளம், திணைவகைகள் பயிரிடப்படுகிறது. |

| 11. காற்று மாசடைதல் | ஒலி மாசடைதல் |
|---|---|
| i. தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களை வெளியிடப்படுவதால் காற்று மாசடைகிறது. | மனிதர்கள் அல்லது இயந்திரங்களினால் ஏற்படும் ஒலி செயல்பாடுகளுக்கு இடையூறாக உள்ளது. |
| ii. மக்களின் நலவாழ்க்கையினைப் பாதிக்கிறது. | மனித, விலங்களின் சமநிலையை பாதிக்கிறது. |

| 12. இரும்பு எஃகு தொழிலகம் | மென் பொருள் தொழிலகம் |
|---|---|
| i. இது ஒரு கனிம வளம் சார்ந்த தொழிலகம் | இது கனிம வளம் சார்ந்த தொழிலகம் |
| ii. இரும்பு எஃகு தொழிலகங்கள் சோடா நாகபுரி வட்டாரத்தில் காணப்படுகின்றன. | நாட்டின் பல்வேறு முக்கியமான நகரங்களில் பரந்து காணப்படுகிறது. |

**கீழ்கண்ட தலைப்பின் கீழ் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி 4 x 1 = 4**

1. பிளாசி மற்றும் பக்சார் போர்.
   அ) 1757-ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார்?
   **விடை:** சிராஜ் உத்தெளலா
   ஆ) துணைப் படைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்?
   **விடை:** வெல்லெஸ்லி பிரபு
   இ) டல்ஹெசி பிரபுவின் கொள்கை யாது?
   **விடை:** வாரிசு இழப்புக் கொள்கை அல்லது அவகாசிலிக் கொள்கை
   ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்போது வெளியிடப்பட்டது?
   **விடை:** 1.11.1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

2. முதல் உலக போரின் போக்கு
   அ) முதல் உலகப்போரின் காலம் என்ன?
   **விடை:** 1914 ஜீலை 28 ல் துவங்கி 1918 நவம்பர் 11 வரை
   ஆ) மைய நாடுகள் யாவை?
   **விடை:** ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளான இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி மற்றும் துருக்கி.
   இ) நேச நாடுகள் யாவை?
   **விடை:** இங்கிலாந்தும் அதன் கூட்டணி நாடுகளான பிரான்சு, ரஷ்யா, செர்பியா, மற்றும் அமெரிக்காவும் செயல்பட்டன.
   ஈ) போரில் உபயோகிக்கப் பட்ட போர்க்கருவிகள் யாவை?
   **விடை:** பீரங்கிப் படை, நீர்மூழ்கிக் கப்பல்களும் மற்றும் பதுங்கு குழி போர்முறை, கப்பல் படையும் பயன் படுத்தப்பட்டன.



www.kalvisolai.com

3. பாசிசக் கட்சி:

அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார்?

**விடை:** முசோலினி, 1921 நவம்பரில் பாசிசத்தை தோற்றுவித்தார்

ஆ) முசோலியான் முழக்கம் பற்றி எழுதுக.

**விடை:** "நம்பு, கீழ்ப்படி போராடு" என்றும் "அதிகப்படை, அதிகமதிப்பு" என்றும் முழங்கினார்.

இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன?

1. நாட்டை உயர்நிலைக்கு கொணரல்
2. தனிமனிதன் உடமைகளை பாதுகாத்தல்
3. ஆற்றல் மிக்க வெளிநாட்டுக் கொள்கை.

ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன?

"எல்லாம் நாட்டிற்காகவே, நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை" என்பது.

4. இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்

அ) ஜப்பானைக் கைப்பற்றியது யார்?

அமெரிக்கா தளபதி ஜெனரல் பெக்ஆர்தர்.

ஆ) இரண்டாம் உலகப் போருக்குப் பின்தோன்றிய இரு வல்லரசுகள் எவை?

1. அமெரிக்கா 2. இரஷ்யா

இ) போருக்குபின் சுதந்திரம் பெற்ற நாடுகள் யாவை?

இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து,
மலேசியா - பிரிட்டன் பிடியிலிருந்தும்,
பிலிப்பைன்ஸ்தீவுகள் - அமெரிக்காவிடமும்,
இந்தோ - சீனா - பிரான்சிடமிருந்தும்,
இந்தோனேசியா - டச்சுகாரர்களிடமிருந்தும் சுதந்திரம் பெற்றன.

ஈ) ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது ஏன்?

உலகில் அமைதி, ஒழுங்கு, மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லினைக்கத்தை ஏற்படுத்த ஐ.நா. சபை ஏற்படுத்தப்பட்டது.

5. இராமகிருஷ்ணமடம்

அ) இராமகிருஷ்ணபரமஹம்சர் என்பவர் யார்?

இவர் தட்சினேசுவர் என்னுமிடத்திலுள்ள கானிக் கோயில் அர்ச்சகர் ஆவார்.

ஆ) இராம கிருஷ்ணமடத்தை நிறுவியது யார்?

1897ல் பேலூரில் சுவாமிவிவேகானந்தர் இம்மடத்தை நிறுவினார்.

இ) உலக சமய மாநாடு எங்கு எப்போது நடைபெற்றது?

1893-ல் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் நடைபெற்றது.

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதியாக கலந்து கொண்டவர் யார்?

"சுவாமி விவேகானந்தர்" ஆவார்.

6. டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார்.

அ) தலித்துக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களின் மீட்பாளர் யார்?

**விடை:** டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார்.

ஆ) இந்தியாவின் முதல் சட்டஅமைச்சர் யார்?

**விடை:** டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார்.

இ) இந்திய அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார்?

**விடை:** உயரிய விருதான "பாரத ரத்னா"விருது வழங்கி சிறப்பத்தது.

ஈ) மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை தலைமை ஏற்று நடத்தியது ஏன்?

**விடை:** தீண்டத்தகாத மக்களுக்காக மனுஸ்மிருத்தி என்ற பொது குளத்தில் குடிநீர் பெறும் உரிமை பெறுவதற்காக பேரணி நடத்தினார்.



www.kalvisolai.com

7. இந்திய தேசியக் காங்கிரஸ்

அ) இந்திய தேசிய காங்கிரஸ் எப்போது தோற்றுவிக்கப்பட்டது?

**விடை:** 1885-ல் ஏற்படுத்தப்பட்டது.

ஆ) இந்திய தேசிய காங்கிரஸ்யாருடைய ஆலோசனையால் தோற்றுவிக்கப்பட்டது?

**விடை:** ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான "ஆலன் ஆக்டேவியன்க்யூம்" என்பவரால்.

இ) காங்கிரசின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது? இதற்கு தலைமை தாங்கியவர் யார்?

மும்பையில் W.C. பானர்ஜியின் தலைமையில் காங்கிரஸ் முதல் மாநாடு நடந்தது.

ஈ) காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் சிலரைக் குறிப்பிடுக.

முதல் மாநாட்டிற்கு நாடு முழுவதிலிமிருந்து 72 பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களுள் தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, எம்.ஜி ரானடே, கோபால கிருஷ்ணகோகலே பிரோசாமேத்தா, ஜி.சுப்ரமணிய ஐயர் போன்றோர் முக்கியத் தலைவர்கள் ஆவர்.

8. மவுண்ட்பேட்டன் திட்டம்:

அ) 1947 ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாக பதவியேற்றவர் யார்?

மவுண்ட்பேட்டன் பிரபு.

ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார்?

கானிங்பிரபு

இ) மவுண்ட் பேட்டன் திட்டம் என்றால் என்ன?

1947 ஆம் ஆண்டு திட்டமிது. இதன்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இருநாடுகளாகப் பிரிக்கப்படும். இந்திய சுதேச அரசுகள் இவ்விரு நாடுகளில் எவற்றுடனோ சேர்ந்து சுதந்திரத்துடன் இருக்கலாம் என்பதாகும்.

ஈ) மவுண்ட்பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன?

இத்திட்டத்தினை இவ்விருகட்சிகளும் ஏற்றுக்கொண்டன.

9. நீதிக்கட்சி

அ) நீதிக் கட்சியை தோற்றுவித்தவர் யார்?

1916-ல் டி.எம். நாயர் மற்றும் தியாகராயசெட்டி ஆகியோர் தோற்றுவித்தனர்.

ஆ) நீதிக்கட்சி எப்போது ஆட்சிக்கு வந்தது?

1920-ல் ஆட்சிக்கு வந்தது.

இ) நீதிக் கட்சி எப்போது தோற்கடிக்கப்பட்டது?

1937-ல் தோற்கடிககப்பட்டது.

ஈ) நீதிக் கட்சியின் சாதனைகள் இரண்டினை எழுதுக.

1. சமூக அரசாணை 1921-22 மூலம் பார்பணர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நியமான இட ஒதுகீடு வழங்கியது.

2. 1924-ல் பணியாளர் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தி, 1929-ல் அதை பொதுப்பணி தேர்வாணையமாக மாறியது.



www.kalvisolai.com

# காலக்கோடு

**I. கிபி.1900 முதல் கி.பி 1920 வரை காலக்கோடு வரைந்து இடைப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற ஐந்து முக்கிய நிகழ்வுகளை குறிக்கவும்.**

**அளவுத்திட்டம் : 1 அலகு = 10 ஆண்டுகள்**




**II. கிபி.1920 முதல் கி.பி 1950 வரை காலக்கோடு வரைந்து இடைப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற ஐந்து முக்கிய நிகழ்வுகளை குறிக்கவும்.**

**அளவுத்திட்டம் : 1 அலகு = 10 ஆண்டுகள்**






www.kalvisolai.com

III. கிபி.1900 முதல் கி.பி 1950 வரை காலக்கோடு வரைந்து இடைப்பட்ட ஆண்டுகளில் நடைபெற்ற ஐந்து முக்கிய சுதந்திரப் போராட்ட நிகழ்வுகளை குறிக்கவும்.

அளவுத்திட்டம் : 1 அலகு = 10 ஆண்டுகள்




## வரலாறு பகுதி

1. சர்வதேச சங்கத்தின் சாதனைகளை விளக்குக.

    1. பின்லாந்து - சுவிடன் இடையே ஆலந்துதீவு உரிமைப் பிரச்சனை தீர்த்தது.
    2. இத்தாலிக்கும் - கிரீஸ் இடையே உள்ள பிரச்சனை
    3. 1926 ல் ஜெர்மனியும்; 1934 ல் ரஷ்யாவும் சர்வதேச சங்கத்தில் இணைந்தது.
    4. உலகில் பரவிய நோய்களை தீர்க்க பாடுபட்டது.
    5. நாடுகளிடையே பண்பாடு கூட்டுறவு, மற்றும் கல்வி தரம் உயர்த்த பாடுபட்டது.
    6. சர்வதேச நீதிமன்றம் 30 வழக்குகளுக்கு தீர்வும், ஆலோசனைகளையும் வழங்கியது.

2. ஐ.நா. வின் முக்கியமான சாதனைகள் யாவை?

    1. பன்னாட்டு பிரச்சனைகளுக்கு அமைதி, மற்றும் பாதுகாப்பு ஏற்படுத்தி சட்ட ரீதியான தீர்வுகள் மூலம் சிறப்பு பணியாற்றுகிறது.
    2. வளைகுடா சிக்கலான இஸ்ரேல் - பாலஸ்தினம்; ஈரான் - ஈராக் பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டுவந்தது.
    3. 1963-ல் அணுசோதனை தடைச்சட்டம் 1996-ல் தொடர் அணு சோதனை தடைச்சட்டம் நிறைவேறச் செய்தது.
    4. சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் உலக பெண்களின் மேம்பாட்டிற்கு உதவியுள்ளது.
    5. சூயஸ்கால்வாய் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்தது.



www.kalvisolai.com

3. 1857 ஆம் ஆண்டு புரட்சி தோல்வியடைந்ததற்கான காரணங்களை விவரி.

புரட்சியாளர்களிடையே ஒற்றுமையோ, ஒருமித்த தலைமையோ, தகவல் தொடர்பும் வசதியோ இல்லாதது.

புரட்சி நர்மதை ஆற்றிற்கு தெற்கில் பரவவேயில்லை.

புரட்சியாளரிடம் நவீன ஆயுதங்களும் பயிற்சி பெற்ற படைவீரர்களும் இல்லை.

திட்டமிட்ட முன்னேற்பாடுகள் இல்லை.

ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சியால் இந்திய மன்னர்கள் ஒன்று சேரவிடாமல் தடுத்தது. அடக்கு முறைகளாலும் அச்சுறுத்தினர். எனவே புரட்சி தோல்வியில் முடிந்தது.

4. 1920-22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக.

**ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது ஏன்?**

ஒத்துழையாமை இயக்கம் நம் தேசதந்தை பகாத்மா காந்தி 1920ல் சத்தியாகிரக முறையிலும், அகிம்சை வழியிலும் ஆங்கில அரசை ஸ்தம்பிக்க வைத்தார்.

- **நோக்கம்** : ரௌலட் சட்டத்தையும், ஜாலிநன் வாலாபாக் படுகொலையை கண்டித்தும் ஒத்துழையாமை இயக்கம் மேற்கொள்வதுமான முடிவு செய்யப்பட்டது.
- **முதல்நிலை:** ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகள், பட்டங்கள் மற்றும் விருதுகளை திருப்பி தருவது.
- **இரண்டாம்நிலை:** வேலை நிறுத்த போராட்டம் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் சட்ட மன்றங்களை புறக்கணிப்பது.
- **மூன்றாம் நிலை:** வரிகொடா இயக்கம் அரசு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை அரசுக்கு வரி கொடுக்க கூடாது என்றும் தீவிரமாக போராடினர்.
- சௌரிசௌரா நிகழ்ச்சி 1922-ல் வன்முறையை மேலும் தூண்டியதால் காந்தியடிகள். இவ்வியக்கத்தினை கைவிட்டார்.

5. தமிழ் சமுதாயத்திற்கு டாக்டர்.முத்துலட்சுமி ஆற்றிய தொண்டுகள் அளவிட முடியாதவை நிரூபிக்க.

- டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி ஒழித்த சமுதாய சீர்கேடுகளில் குறிப்பிட தக்கது தேவதாசி முறை.
- புற்றுநோய் ஒழிப்பால் தீவிரம் காட்டினார். சென்னை அடையாற்றில் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டது.
- தமிழக சட்டமேலவையில் தேவதாசி ஒழிப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1930-ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்திய பெண்கள் மாநாடு நடத்தி சுமார் 12 ஆண்டுகள் இந்திய மாதர் சங்கதலைவியாக இருந்தார்.
- அநாதைகளுக்காக “அவ்வை இல்லம்” தொடங்கினார்.

  மற்றும் மருத்துவப்பணிகள், சமூகப்பணி, அரசியல் தொண்டு, பெண்கள், ஆதரவற்றோருக்கான அரும் பணியாற்றினார்.

## புவியியல்

1. “இந்தியா ஓர் துணைக்கண்டம்” - நியாயப்படுத்து (அல்லது) காரணம் கூறு.

**இந்தியா ஓர் துணைக்கண்டம் காரணங்கள்:**

- கண்டம் என்பது பல்வேறு வகையான
- இயற்கை அமைப்பு பிரிவுகளையும்;
- காலநிலை, இயற்கை தாவரங்கள், கனிம வளங்கள்
- கலாச்சாரங்கள்
- இனம், மொழிகளையும்
- மிகப் பரந்த நிலப்பரப்புகளையும் கொண்டது.



www.kalvisolai.com

இந்த அனைத்துக் கூறுகளும் ஒருங்கே இந்தியாவில் காணப்படுவதால் இந்தியாவை ஒரு துணைக்கண்டம் என்று அழைக்கிறோம்.

2. காடுகளின் முக்கியத்துவத்தை விவரி.

**காடுகளின் முக்கியத்துவம்:**

1. காடுகள் வீட்டுத் தேவைக்கும்; வணிகத்திற்கும் தேவையான விலையுயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைக்குரிய மூலப் பொருட்களையும் தருகிறது.
2. அரக்கு, கோந்து, பிசின், தோல் பதனிட்டுப் பொருட்கள், மருந்துகள், மூலிகைகள், தேன் மற்றும் நறுமணப்பொருட்களை நல்குகிறது.
3. அன்னிய செலவானியை ஈட்டுகிறது.
4. பல காடுகள் சுற்றுலா மையங்களாக வளர்ச்சியடைந்துள்ளன.
5. காடுகள் வளிமண்டல காற்று மாசுபடுதலை தடுக்கிறது.
6. மண் அரிப்பை தடுக்கிறது.
7. மனிதன், பறவை, விலங்குகளுக்கு இயற்கை வாழிடமாக உள்ளது.
8. மழைப் பொழிவிற்கு உதவி, எரிசக்தி தேவையையும் பூர்த்தி செய்கின்றது.

3. அமில மழையின் விளைவுகள் யாவை?

**அமில மழையின் விளைவுகள்:**

1. அமில மழையினால் கடலிலுள்ள நுண்ணிய உயிரிகளான பிளாங்டன் என்ற மீன் இன உணவு அழிக்கப்படுகிறது.
கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகிறது.
2. கடல் வெப்பம் அதிகரித்தால் பவளப்பாறைகளின் வளர்ச்சி பாதிக்கப் படுகிறது.
3. இயற்தொகுதிகளான காடுகள் மற்றும் பாலைவனங்கள் பாதிக்கப்பட்டு; உயிரினப்பன்மை இழப்பு ஏற்படுகிறது.
4. அமில மழை விழும் போது மண்ணில் சத்து அரிக்கப்பட்டு, இயற்கை தாவரங்களை பாதிக்கிறது.
5. தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் மழைநீரில் கலப்பதால் நீரோடு பூமியின் மீது அமிலத்தன்மை பாதிக்கப் படுகிறது.

4. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினைப் பயன்படுத்தும் முறையினை விவரி.

தொலை நுண்ணுணர்வின் மூலம் பெறப்பட்ட புதிய தகவல்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வாக அமைகிறது.

**தொலை நுண்ணுணர்வின் பயன்கள்:**

1. பரந்து விரிந்து நிலப்பரப்பினைப் பற்றிய விவரங்களை சுருக்கமாக அளிக்கிறது.
2. அணுக முடியாத புவிப்பகுதியின் விவரங்களையும் கண்டறியலாம்.
3. புவியின் விவரங்களை எளிதாகவும், வேகமாகவும், சரியாகவும், தொடர்ந்தும் திரட்டித் தருகிறது.
எ.கா. பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள்
4. நாட்டு நலத்திட்டங்கள் தீட்டவும், அதை செயல் படுத்தவும் உதவுகிறது.
எ.கா. இயற்கைச் சீற்றங்களான சுனாமி, வறட்சி செள்ளம், புயல் - இடங்களை அறிந்து மறு சீரமைக்க உதவுகிறது.

மேப்பியலாளர்கள், மக்கள் அடர்த்தி, மண்வகை போன்ற கருத்து நிலவரைப் படங்களை மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் வரைய ஏதுவாகியுள்ளது.



www.kalvisolai.com

# குடிமையியல்

1. பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை பற்றி எழுதுக.
இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் உலக அமைதிக்காக 5 அம்சங்கள் அடங்கிய கொள்கையை வகுத்து தந்தார். அதுவே "பஞ்சசீலக் கொள்கை"

**பஞ்சசீலக் கொள்கையின் சரத்துகள்:**

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை இறையாண்மையை மதிக்க வேண்டும்.
2. எந்த ஒரு நாடும் பிற நாட்டைத் தாக்க கூடாது.
3. பிற நாடுகளின் உள் விவகாரத்தில் தலையிடக் கூடாது.
4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பர நல்லுறவு கொண்டிருத்தல்.
5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணைங்கியிருத்தல் இக்கொள்கையால் உலக அரங்கில் இந்தியாவின் பெருமை மேலும் உயர்ந்தது.
6.

**அணி சேராக் கொள்கை:**

இரண்டாம் உலகப் போருக்குபின் உலக நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்தன. ஒரு அணிஅமெரிக்கா தலைமையிலும், மற்றொரு அணி ரஷ்ணா தலைமையிலும் இணைந்தன. இவ்விரு அணிகளும் உலகில் தங்கள் செல்வாக்கை நிலை நாட்ட முயன்றன. அதனால் உலகில் தங்கள் செல்வாக்கை நிலை நாட்ட முயன்றன. அதனால் உலகில் பதட்ட நிலையும் அமைதியின்மையும் ஏற்பட்டன. இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணிசேராநாடாக) இருந்ததுடன் இவ்வணிகளுக்கிடையே மோதல் மோதல் உருவாகும் சமயத்தில் இந்தியா சமரசம் செய்து உலக அமைதியை நிலை நாட்டி வருகிறது.

2. தேர்தல் முறையை பற்றி குறிப்பிட்ட அவற்றைப் பற்றி விளக்கம் தருக.
**இந்தியாவில் தேர்தல் முறை:**
தேர்தல் முறை நேரடித்தேர்தல், மறைமுகத் தேர்தல் என இருவகைப்படும். தேர்தல் மூலம் குடிமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**நேரடித்தேர்தல்** :
குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களிக்கப் படுவர். இம்முறைபடி சட்டமன்றமங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
மறைமுகத் தேர்தல்: இம்முறையில் நேரடியாக வாக்களிக்காமல் தங்களின் பிரதி நிதிகளைக் கொண்டு உறுப்பினர். தேர்ந்தெடுக்கும் முறையாகும். இதன்படி நாடாளுமன்ற மேல் சபை உறுப்பினர் குடியரசு தலைவர் மற்றும் துணைக்குடியரசு தலைவர் தேர்ந்தெடுக்க படுகிறார்கள்.

**இடைத்தேர்தல் :**
சில சமயஙகளில் ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் இறந்து விட்டாலோ, பதவி விலகினாலோ அத்தொகுதிக்கு மட்டும் தேர்தல் நடைபெறும்.
இடைப்பருவத்தேர்தல்: சில சமயங்களில் நாடாளுமன்றமோ, சட்ட மன்றங்களோ அதன் ஆட்சிகாலம் முடியுமுன் கலைககப்பட்டாலோ, பதவி விலகினாலோ மீண்டும் நடத்தப்படும் தேர்தல் உபதேர்தல் அல்லது இடைப்பருவதேர்தல் எனப்படும்.



www.kalvisolai.com

3. நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

**நுகர்வோரின் உரிமைகள்:**

1. நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கும், சொத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்துமாயின் தங்கள் எதிர்ப்பினை தெரிவிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.
2. பொருட்களின் தரம், அளவு, தன்மை, எடை உண்மை நிலை, விலை ஆகியன குறித்து நுகர்வோர்க்கு தெரியப்படுத்த வேண்டும்.
3. தவறான வியாபார முறைகள் குறித்தோ அல்லது நுகர்வோர் சுரண்டபடகிற நேரத்தில் தங்களுக்கு சரியானத் தீர்ப்பு கிடைக்க நுகர்வோர் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி தீர்ப்பு பெற்றுக் கொள்ளலாம்.
4. பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
5. 2005-ல் அக்டோபர் 12ம் நாள் "தகவல் அறியும் சட்டம்" நிறைவேற்றப்பட்டது. அதனால் பொது நிறுவனங்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் அறிந்து கொள்வது பொது மக்களின் உரிமையாகும்.

# பொருளியல்

1. **நாட்டு வருமானத்தை அறிவதின் அவசியம் யாது?**

1. ஒரு நாட்டின் பொருளாதார செய்பாடுகளை கணக்கிடஉதவுகிறது.
2. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், பணிகளின் மதிப்பை அறியமுடிகிறது.
3. பொருளாதாரவளர்ச்சியின் போக்கு, வேதம் மற்றும் மந்தைய ஆண்டுகள் மற்றும் மற்ற நாடுகளின் நாட்டு வருமானத்துடன் ஒப்பிட்டு பார்க்க முடியும்.
4. பொருளாதார வளர்ச்சிக்கு அரசுகொள்கைகள் திட்ட மிடலுக்கும் உதவுகிறது.
5. நாட்டு வருமானத்தில் முதன்மை துறை, இரண்டாம் துறை மற்றும் பணிகள் துறை பங்களிப்பு அமைப்பை அறிய முடிகிறது.

2. **பதினோறாவது ஐந்தாண்டுதிட்டத்தின் நோக்கங்களை விவரி.**

பதினொறாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்:

1. நீர்ப்பாசன வசதிகள், கிராமங்கள், மின்மயமாதல் மற்றும் கிராமசாலைகள் மேம்படுத்த அரசின் முதலீட்டை அதிகரித்தல்.
2. மின்சாரம் மற்றும் உரங்களுக்கு மானியம் குறைத்தல்.
3. வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப் படுத்தல்.
4. சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல்.
5. வேலை வாய்ப்புகள் விரிவாக்கம்,
6. கிராம புரங்களில் கட்டமைப்பு வசதி, மற்றும் வறுமையை ஒழித்தல்,
7. தொடக்கக் கல்வியில் இடைநிற்றவைத் குறைத்தல்.

3. **பசுமைப் புரட்சியை விளக்குக.**

இந்திய பொருளாதாரம் பின்தங்களி கிராம பொருளாதாரத்தின அடிப்படையில் அமைந்தது. இந்தியா ஒரு பருவகாற்றின் தோட்டாமாக திகழ்கிறது. எனவே வேளாண்மை குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**பசுமைப்புரட்சி:**

நிலச்சீர்த்திருத்தம், வீரியமுள்ள விதைகள், பாசனவசதிகள் மேம்பாட்டால் உற்பத்தியை பெருக்குவதே நோக்கம் ஆகும். இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்தது. நில உச்சவரம்பு சட்டம், வினோபாபாவேயின் பூமிதான இயக்கம் - நிலமில்லா ஏழை விவசாயிகள் வழி, விளைநிலங்களாக மாறின. வீரியமுள்ள விதைகள், நீர்ப்பாசன வசதிகள் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்தகள் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனமும் வேளாண் பல்கலைக்கழகங்களுமே இப்புரட்சிக்கு வித்திட்டன.



www.kalvisolai.com

## பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் நலத்திட்டங்கள்

- விலையில்லா மடிக்கணினி
- விலையில்லா மிதிவண்டி
- விலையில்லா பாடநூல்கள்
- விலையில்லா பாட ஏடுகள்
- விலையில்லா சீருடை
- விலையில்லா காலணி
- விலையில்லா பேருந்து பயண அட்டை
- விலையில்லா புத்தகப் பைகள்
- விலையில்லா புவியியல் வரைபடங்கள்
- விலையில்லா கணித உபகரணப் பெட்டி
- விலையில்லா வண்ணப் பென்சில்கள்
- சத்துணவுத் திட்டம்
- சிறப்புக் கட்டணம் இல்லாத கல்வி
- தமிழ் வழி மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விலக்கு
- பெண் கல்வி ஊக்குவிப்புத் தொகை
- கல்வி உதவித்தொகை
- இடைநிற்றலைத் தவிர்க்க சிறப்பு வைப்புத் தொகை
(10 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு)
- வருமானம் ஈட்டும் பெற்றோர் விபத்தினால் இறந்தால் ரூ.50,000 உதவித் தொகை
- பள்ளி மூலம் சாதி, வருவாய் மற்றும் இருப்பிடச் சான்றுகள்
- ஸ்மார்ட் கார்டு
- ஸ்மார்ட் வகுப்பு

இது போன்ற இன்னும் பல திட்டங்கள்

ஆதலால்

**தொடர்ந்து பயில்வீர் !** **பயன் பெறுவீர் !!**

www.kalvisolai.com